# பாதிகப்பட்டோர் உதவித் திட்டம்

## பாதிக்கப்பட்டோர் உதவித் திட்டம்

பாதிக்கப்பட்டோர் உதவித் திட்டத்திற்கு (VAP) விக்டோரிய மாநில அரசாங்கத்தால் நிதியுதவியளிக்கப்படுகிறது. இந்த நிதியுதவியானது முறையீடு பதியப்பட்ட அல்லது பதியப்படாத குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, மன நலப் பேரதிர்ச்சிக்கு உள்ளாகக் கூடியவர்களுக்கு உதவும் சேவைகளை இலவசமாக வழங்குகிறது

பாதிக்கப்பட்டவர்கள் மீண்டுவருவதற்கான அவர்களின் பாதையில் பெற்றுக்கொள்ளக்கூடிய சேவையாக, பாதிக்கப்பட்டோரை உன்னிப்பாகச் செவிமடுத்தல், தகவல் அளித்தல் மற்றும் வலுவூட்டல் போன்றவற்றை வழங்கிப் பாதிகப்பட்டோருக்கு உதவுவதுதான் VAP -இன் இலட்சியமாகும்.

நடைமுறை ஆதரவு, பரிந்துபேசுதல், விடைய முகாமை ஆதரவு, குற்றவியல் நீதி நடவடிக்கைகளுடனான உதவி மற்றும் பல்வேறு சிகிச்சை சார்ந்த தலையீடுகளுக்கு வழியேற்படுத்த உதவுதல் போன்றவற்றை நாம் வழங்குகிறோம். VAP -ஆல் நேரடியாக இந்தச் சேவைகள் வழங்கப்படலாம் அல்லது சமூகத்தைத் தழுவிய வேறு சேவைகளுக்குப் பரிந்துரைசெய்வதன்மூலம் ஒழுங்குசெய்யப்படலாம்

நீங்கள் சேவைகளை அணுகுவதற்கு இந்தக் குற்றச்செயல் காவல்துறை (பொலிஸ்)க்கு அறிவிக்கப்பட்ட ஒன்றாக இருக்கவேண்டியதில்லை

### கிடைக்கக்கூடிய சேவைகள்

VAP சேவைகளுக்குள் பின்வருவன அடங்கும்:

- உங்களுக்குத் தேவையான உதவிகள் எவையென அடையாளம்காண உங்களுக்கு உதவுதல்
- உங்களின் பாதுகாப்பை நிர்வகித்தல்
- காவல் துறையுடன் (பொலிஸ்) தொடர்புகொள்ளல்
- பூட்டுகள் மற்றும் ஏனைய அவசரப் பாதுகாப்பினை மாற்றுதல்
- போக்குவரத்து மற்றும் மருத்துவ சேவைகளை ஒழுங்குசெய்தல்
- உங்களுக்கு உதவக்கூடிய ஏனைய சேவைகளைக் கண்டுபிடித்தல்
- நீதிமன்றுக்குத் தயாராதல்
- பாதிக்கப்படவருக்கு ஏற்பட்ட தாக்கம்பற்றிய வாக்குமூலம் (Victim Impact Statement) ஒன்றினை நீதிமன்றுக்காத் தயாரித்தல்.
- 'வயதானோர் நன்நடத்தைப் பிணைக்கான சபை' (Adult Parole Board) -க்கு கருத்துரைப்பைச் சமர்ப்பித்தல்
- மனநலஆலோசனை அமர்வுகளை ஒழுங்குபடுத்துதல்
- உங்களுக்குத் தகுதி இருக்குமானால் நிதியுதவிக்காக Victims of Crime Assistance Tribunal (VOCAT) இற்கு விண்ணப்பித்தல்.

## இந்த சேவை யாருக்காக?

விக்டோரியாவில் இடம்பெற்ற, ஒரு தனிநபருக்கு எதிரான குற்றச்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது அதனைக் கண்ணால் பார்த்த ஒருவர் இந்தச் சேவையைப் பயன்படுத்தலாம்.

இந்தச் சேவைக்கு நீங்கள் தகுதியுடையவரா என்பது பற்றி நிச்சயமாக உங்களுக்குத் தெரியாதுவிட்டால், 1800 819 817 எனும் எண்ணில் Victims of Crime Helpline-ஐ அழையுங்கள்.

## சேவை வழங்கப்பட்டும் இடங்கள்

மெல்பேர்ன் முழுவதும் அத்துடன் விக்டோரியாவில் இருக்கும் பிராந்திய பிரதேசங்கள் அனைத்திலும் பாதிக்கப்பட்டோர் உதவித் திட்டம் அமைவிடங்களைக் கொண்டுள்ளது.

## சேவையைத் தொடர்புகொள்ளல்

உங்களுடைய உள்ளூர் சேவைக்கு Victims of Crime Helpline உங்களைப் பரிந்துரை செய்ய இயலும்

**திறந்திருக்கும் நேரம்:** காலை 8 மணி–மாலை 11 மணி – தினமும்
**அழைக்கவேண்டிய எண்:** 1800 819 817

நீங்கள் உங்கள் உள்ளூர் VAP சேவையுடன் நேரடியாகவும் தொடர்புகொள்ளலாம்.

**DPV Health**
**திறந்திருக்கும் நேரம்:** காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை (பொது விடுமுறை நாட்கள் தவிர) தினமும்
**அழைக்கவேண்டிய எண்:** 03 7035 9721
**மின்னஞ்சல்:** VAPintake@dpvhealth.org.au

**Epping**
230 Cooper St
Epping Victoria 3076

## உங்கள் தகவல்கள் மற்றும் தனியுரிமை

சட்டத்தில் கோரப்பட்டதன் அடிப்படையில் உங்களுடன் தொடர்புடைய கோவைகள் மற்றும் பதிவேடுகள், அந்தரங்கமாகவும், பாதுகாப்பாகவும் வைக்கப்படும். இந்தத் தகவல்கள் இல்லாமல், நீங்கள் கேட்கக்கூடிய ஆதரவை எம்மால் உங்களுக்கு வழங்க முடியாமல் போகலாம். உங்களைப்பற்றி முகவர் வைத்திருக்கும் தகவல்கள் Victims Assistance Program-இன் கீழ் மிகவும் குறிப்பிடத்தக்க சூழ்நிலைகளில் வேறு நிறுவனங்களுக்கும், Victims of Crime Helpline -க்கும் வெளியிடப்படலாம்.

www.victimsofcrime.vic.gov.au/privacy- இல் எமது தனியுரிமைக் கொள்கை பற்றி மேலும் கண்டறியலாம்.

DPV Health

## நிச்சயமாக நீங்கள் மரியாதையுடன் நடத்தப்படவேண்டும்

The Victims' Charter Act 2006 (பாதிக்கப்பட்டோர் சிறப்புரிமைச் சான்றுச் சட்டம் 2016) என்பது விட்டோரியாவில் ஒரு சட்டமாகும். இது பாதிக்கப்பட்டோர் ஆதரவு சேவைகள், பொலிஸ், மற்றும் வழக்குத் தொடுநர்கள் உங்களைப் பின்வருமாறு நடாத்தவேண்டுமெனக் கூறுகிறது:

- மரியாதை
- விநயம் மற்றும்
- கண்ணியம்

நீங்கள் மரியாதையாக நடாத்தப்படவில்லை அல்லது உங்களுக்குச் சரியான தகவல் தரப்படவில்லையென நீங்கள் நம்பினால்,நீங்கள் ஒரு முறையீட்டை மேற்கொள்ளலாம்.
மேலும் தகவல்களுக்கு:

1800 819 817 எனும் எண்ணில் Victims of Crime Helpline - ஐ **அழையுங்கள்**

www.victimsofcrime.vic.gov.au எனும் **இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள்**

## DPV Health பற்றியது

Melbourne's Northern Growth Corridor-இல் அமைந்துள்ள 19 இடங்களிலிருந்து இயங்கும் DPV Health ஆனது இலாப நோக்கமற்ற சமூக சுகாதார சேவையாகும். பாதிப்படையக்கூடிய சமூகங்களுக்கு ஆதரவளிப்பதற்காக அர்ப்பணித்து, விரிவான வெவ்வேறுபட்ட ஒன்றிணைந்த சுகாதாரசேவைகள், பல்மருத்துவம், மருத்துவம், NDIS, குழந்தைமருத்துவம், மனநலம், இருப்பிடம் இன்மை, குடும்பவன்முறை, அத்துடன் மற்றய சமூகத்திட்டங்ளை நாங்கள் வழங்குகிறோம். 15 வேறுபட்ட மொழிகளைப் பேசும் இரு-கலாசார பணியாளர்களை வேலைக்கமர்த்தி, அதேபோல இந்த நாட்டின் முதல் தேசிய மக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட 4 பதவிகள், மற்றும் தற்சமயம் Pride in the North உடன் இணைந்து செயற்படும் நாங்களும் ஒரு Rainbow Tick நிறுவனம் ஆவோம். DPV Health என்பது, மெல்பேர்ன் பெருநகரத்தின் வட பிராந்தியத்தில் பாதிக்கப்பட்டோர் உதவித் திட்டத்தின் (VAP) வழங்குநர் ஆகும்.

## பிற பயனுள்ள சேவைகள்

**Lifeline**
13 11 14

**Kids Helpline**
1800 55 1800

**Rainbow Door**
1800 729 367

**13 YARN**
13 92 76

**Safe Steps 24 மணிநேரக் குடும்ப வன்முறை எதிர்வினை சேவை**
1800 015 188

**MensLine**
1300 789 978

1800 819 817-ஐ **அழையுங்கள்**

0427 767 891-இல் **குறும்செய்தி**

**மின்னஞ்சல்** vsa@justice.vic.gov.au

நீங்கள் கேட்டல், அல்லது செவிப்புலன் அல்லது பேச்சுக் குறைபாடு உள்ளவர் எனில் National Relay Service. ஊடாக எம்முடன் தொடர்புகொள்ளவும்.

மேலும் தகவல்களுக்கு www.relayservice.gov.au

www.victimsofcrime.vic.gov.au

**Victims of Crime Helpline**

தினமும் காலை 8– மாலை 11 வரை **திறந்திருக்கும்**.